கண்டிப்பாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலே, அந்த மாணவர்களின் சேர்க்கைக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத வகையில், தேவை ஏற்படின், பரிசீலனை செய்து, புதிதாகக் கல்லூரி ஒன்றைத் தொடங்க ஆய்வு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இன்றைக்கு கல்வியியல் கல்லூரி, அதாவது, B.Ed. *கல்லூரி தொடங்கப்படுமா என்றும் கேட்டிருக்கிறார். இந்த ஆண்டு* B.Ed. *தொடங்குவதற்குண்டான வாய்ப்புகள் இல்லை; நிறுத்தப்பட்டிருக்கிறது.* Integrated course *என்று சொல்லக்கூடிய* B.Sc., B.Ed., *மற்றும்* B.A., B.Ed., *ஆகிய பாடப் பிரிவுகளை அங்கே தொடங்குவதற்கான பணிகளில் அரசானது முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே,* NCTE*–யிடமிருந்து அனுமதி கிடைத்தவுடன், இந்தக் கல்வியாண்டிலேயே அந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கான பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

கால்நடை மருத்துவமனை

***48758—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கொத்தக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொத்தக்கோட்டை கிராமத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக கால்நடை மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்துள்ளார்கள். அரசின் கொள்கையின்படி, ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும்மேல் இருந்தால், முதலில் கால்நடை கிளை நிலையம்தான் துவங்க முடியும். கால்நடைகளின் அலகுகள் 5,000–க்கும்மேல் இருந்தால்தான் அந்தக் கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கொத்தக்கோட்டை கிராமத்தில் நேரடியாக கால்நடை மருத்துவமனையை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர், தமிழினத்தினுடைய தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொத்தக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை ஏற்றுக்கொள்கிறேன். கொத்தக்கோட்டை ஊராட்சி என்பது 15,000 மக்கள் தொகை கொண்ட மிகப் பெரிய ஊராட்சியாகும். இந்த ஊராட்சியைச் சுற்றி தெட்சிணாபுரம், கோவிலூர், மாஞ்சான்விடுதி, காயம்பட்டி ஆகிய ஊராட்சிகள் இருக்கின்றன. இந்தப் பகுதியில் இருக்கின்ற கால்நடைகள் மருத்துவ வசதி பெற வேண்டுமென்றால், தொலைதூரத்தில் இருக்கின்ற அரசினப்பட்டி கால்நடை மருந்தகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இந்தப் பகுதியில் வசிக்கும் பெண்கள், தங்கள் குடும்ப வருமானத்திற்காக கால்நடைகளை அதிகமாக வளர்த்து வருகின்றனர். அந்தக் கால்நடைகளுக்கு இனப் பெருக்க ஊசி போட வேண்டுமென்று சொன்னாலும், 15 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மருந்தகத்திற்கு பெண்கள்

2019 ஜூலை 10]

செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதியில் கால்நடை கிளை நிலையத்தை இந்த ஆண்டு அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கொத்தக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களான தெட்சிணாபுரம், ஈரடிப்பட்டி, மேலக்கோட்டை, கோவிலூர் மற்றும் கல்யாணபுரம் ஆகிய கிராமங்களில் 3,000–க்கும் அதிகமாக, அதாவது 3,329 கால்நடை அலகுகள் உள்ளன. அங்கு கால்நடை கிளை நிலையத்தைத் துவங்கிட சாத்தியக்கூறுகள் உள்ளதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கொத்தக்கோட்டை கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்தியாவிலுள்ள முதலமைச்சர்களுக்கெல்லாம் முன்னோடியாக 1989 ஆம் ஆண்டே, முதல் கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்தை அமைத்துத் தந்தவர் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு இடங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், கால்நடைகளுக்குப் போதுமான குடிதண்ணீர் கிடைக்காத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. குறிப்பாக

என்னுடைய ஆலங்குடி தொகுதியில் உள்ள வடகாடு கால்நடை மருத்துவமனைக்கு ஆழ்குழாய்க் கிணறும், கொத்தமங்கலம் கால்நடை மருத்துவமனைக்கு ஆழ்குழாய்க் கிணறும் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கிறேன். மேலும், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை விடுதி, எல்.என். புரம், மேற்பனைக்காடு, அரசகுளம் ஆகிய பகுதிகளிலும் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடைகளுக்கு குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஏதுவாக ஆங்காங்கே தொட்டிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே வைத்தார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாக, கால்நடைகளுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக, தமிழகம் முழுவதும் ஏற்கெனவே 15,550 கால்நடைகளுக்கான தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட வேண்டுமென்றும், கால்நடை கிளை நிலையங்கள் அமைத்திட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, எங்களது துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, தேவைப்படுமாயின் அந்தப் பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் அமைந்துள்ள கால்நடை பண்ணையில் விந்து உற்பத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கே உற்பத்தி

2019 ஜூலை 10]

செய்யப்படும் விந்துகளினுடைய குச்சிகளைப் பயன்படுத்தி, செயற்கை கருவூட்டல் மூலமாகப் பிறக்கும் கன்றுகளில், 50 சதவிகித கன்றுகள் கிடாரிக் கன்றுகளாகவும், 50 சதவிகித கன்றுகள் காளைக் கன்றுகளாகவும் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதை எடுத்துச் சொன்னோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயியாக இருக்கின்ற காரணத்தால், விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாய சங்கத்தினரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது அதிகளவில் கிடாரிக் கன்றுகள்தான் வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தார்கள். அந்த வேண்டுகோளின்படி, இந்தியாவிலே முதன்முறையாக கிடாரிக் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காக, உதகமண்டலத்தில் உள்ள கால்நடைப் பண்ணையில் மாட்டின விந்துகளை பாலினம் பிரிக்கும் வசதியினை 47.50 இலட்சம் ரூபாய் செலவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்திற்கு பசுக்கள் முக்கியப் பங்கு வகிப்பதாலும், மக்களின் வாழ்க்கையில் பால் அத்தியாவசியமாக இருக்கின்ற காரணத்தாலும், கிராமப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அதிகளவில் கிடாரிக் கன்றுகள்தான் வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கிறார்கள். ஆகவே, உதகமண்டலத்தில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணையில்தான் இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு முதன்முறையாக மாட்டின விந்துகளை பாலினம் பிரிக்கின்ற வசதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*